**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொழிலாளர் துறை – காலஞ்சென்ற திரு.எஸ்.பிரான்சிஸ் சேவியர், முத்திரை ஆய்வாளர் திருவொற்றியூர் என்பவரின் மகன் திரு.எப்.நித்தின் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ2) துறை**

அரசாணை (3டி) எண்.09

நாள் : 13.05.2024
குரோதி வருடம், சித்திரை – 30
திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்க:

1. தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.ஜி3/16624/2021, நாள் 03.10.2022.
2. தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ஜி3/966/2024, நாள் 27.02.2024.
3. அரசு கடித எண்.3248/A2/2023–1, மனிதவள மேலாண்மைத் (ஏ) துறை, நாள் 07.09.2023.

------

ஆணை :

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணையில், காலஞ்சென்ற திரு.எஸ்.பிரான்சிஸ் சேவியர், முத்திரை ஆய்வாளர், திருவொற்றியூர் என்பவரின் மகன் திரு.எப்.நித்தின் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது என்றும், தனியர் 06.10.2022 அன்று முற்பகல் முதல் சென்னை தொழிலாளர் இணை ஆணையர்–1 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளின்படி இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார் என்றும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி